**நிவித்திகல பிரதேச சபை - 2020**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

நிவித்திகல பிரதேச சபையின் 2020 திசெம்பர் 31 உள்ளவாறான நிதி நிலமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி செயலாற்றல் கூற்று, முக்கியமான கணக்கீட்டு கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கமளித்தல் தகவல்களின் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2020 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை அதிகாரசச் சட்டத்தின் 172(1) ஆம் உப பிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்திலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையில் உள்ளடக்கப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் எமது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும்எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் தரப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களின் தாக்கங்களைத் தவிர்த்து, நிதிக்கூற்றுக்கள் 2020 திசெம்பர் 31 இல் நிவித்திகல பிரதேச சபையின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதிச்செயலாற்றல் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க உண்மையான நியாயமான நிலைமையை வெளிப்படுத்துகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களை அடிப்படையாகக் கொண்டு எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க என்னால் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. இக்கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்பு, இந்த அறிக்கையின் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு சம்பந்தமான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் என்ற பகுதியில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் வகையில் என்னால் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வு சான்றுகள் போதியளவானவை மற்றும் பொருத்தமானவை என்பது எனது நம்பிக்கையாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் சம்பந்தமாக முகாமைத்துவத்தினதும் தொடர்புபட்ட நிருவகிக்கின்ற தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க தயாரித்தலும் நியாயமாகச் சமர்ப்பித்தலும் மற்றும் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூய பொருண்மையான பிறழ் கூற்றுக்களற்ற நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு இயலுமான வகையில் தேவையான உள்ளக கட்டுப்பாட்டினைத் தீர்மானிப்பது முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் நடைமுறை சம்பந்தமான பொறுப்பு, நிருவகிக்கின்ற தரப்பினர்களால் ஏற்றுக் கொள்ளப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் பிரதேச சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் சொந்த வருமானங்கள், செலவுகள் சொத்துக்கள், பொறுப்புக்கள் என்பன தொடர்பாக முறையான ஏடுகள் மற்றும் அறிக்கைகள் பேணப்படுதல் வேண்டும்.

**1.4 கணக்காய்வின் நோக்கெல்லை (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு சம்பந்தமாக கணக்காய்வாளரின் பொறுப்பு)**

---

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள் மோசடி மற்றும் தவறுகளின் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்கள் அற்றவை என்பதற்கான உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் அதன் பொருண்மையான தன்மையானது இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் அமுல்படுத்தப்படுகின்ற பொருளாதார தீர்மானம் தொடர்பான ஏற்படுத்துகின்ற தாக்கத்தின் அடிப்படையில் தங்கியுள்ளது.

இலங்கை கணக்காய்வு நியமத்தின் பிரகாரம் கணக்காய்வின் ஒரு பகுதியாக என்னால் கணக்காய்வின் போது தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் நடவடிக்கை எடுக்கப்பட்டது. என்னால் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களினால் ஏற்படும் ஆபத்துக்களை இனங்காண்பற்கும் மதிப்பீடு செய்வதற்குமாக சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு அமுல்படுத்தப்பட்டன. பிழையாகக் காட்டுவதன் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து இடம்பெறுகின்ற தாக்கங்களை விட மோசடிகளால் இடம்பெறுகின்ற தாக்கங்கள் பாரியதாக இருப்பதானது தவறான கூட்டிணைவால், போலி ஆவணங்களைத் தயாரிப்பதனால், வேண்டுமென்றே விட்டுவிடுவதனால், பிழையாகக் காட்டுவதனால் அல்லது உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தவிர்ப்பதனால் ஆகிய காரணங்களினால் ஏற்படுவதினாலாகும்.

- உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கமல்லாதிருந்தும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடும் வகையில் உள்ளகக் கட்டுப்பாடுகள் மீதான அறிவு பெற்றுக் கொள்ளப்பட்டது.

- பயன்படுத்தப்படுகின்ற கணக்கீட்டு கொள்கைகளின் பொருத்தத் தன்மை, கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மை, முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளின் வெளிப்படுத்தல்கள் என்பன மதிப்பீடு செய்யப்பட்டன.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடங்கங்களுக்கா அடிப்படையாகக் கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளன எனவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் மதிப்பீடு செய்யப்பட்டது.

இயலுமான வகையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்பவருனவற்றை பரீட்சிப்பதற்காக கணக்காய்வு நோக்கொல்லை விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்களைச் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது பிரதேச சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள் நடைமுறைகள், பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாகவும் பேணிச் செல்லப்படுகின்றதா எனவும்,

- உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது பிரதேச சபையினால் வழங்கப்பட்ட ஏனைய பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க பிரதேச சபை செயற்படுகின்றதா எனவும்,

- தனது அதிகாரங்கள், கடமைகள், மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா எனவும்,

- வளங்கள் சிக்கனமாகவும், செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளதா எனவும் ஆகும்.

## 1.5 ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தில் பின்வரும் தேவைப்பாடுகளிற்காக குறித்துரைக்கப்பட்ட ஏற்பாடுகளை உள்ளடக்குகின்றன.

(அ) அதிகாரசட்டத்தின் 6(1)(ஈ)(iii) ஆம் பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் பிரதேச சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் ஒத்திருக்கின்றன.

(ஆ) அதிகாரசட்டத்தின் 6(1)(ஈ)(iv) ஆம் பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் முன்னைய ஆண்டில் என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் அனைத்தையும் சமர்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களினுள் உள்ளடக்குகின்றன.

## 1.6 நிதிக்கூற்றுக்களை தயாரிப்பது சம்பந்தமான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | சிபார்சுகள் |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டில் நிலையான சொத்துக்களை மேன்படுத்தவென மேற்கொண்ட கிரயம் ரூபா 8,817,825 மூலதனமாக்கப்பட்டு இருக்கவில்லை. | 2021 ஆண்டில் கணக்குகள் தயாரிக்கும் போது சரி செய்வதாக. | நிலையான சொத்துக்களை மேன்படுத்துவதற்கான கிரயம் மூலதனமாக்கப்பட வேண்டும். |
| (ஆ) | தளப்பரப்பு கற்கள் பரப்பி அபிவிருத்தி செய்யும் வேலைக்கான கடன்படுனர் ரூபா 642,740 மற்றும் கடன்கொடுனர் ஏற்பாடு ரூபா 521,112 கூடுதலாக காட்டப்பட்டிருந்தன. | 2021 ஆண்டில் கணக்குகள் தயாரிக்கும் போது சரி செய்வதாக. | கடன்கொடுனர் மற்றும் கடன்படுனர் பெறுமதியை சரியாக இனங்கண்டு கணக்கீடு செய்ய வேண்டும். |
| (இ) | மீளாய்வாண்டிற்கான அனுமதிப்பத்திர கட்டண வருமானம் ரூபா 59,700 குறைவாக காட்டப்பட்டிருந்தது. | 2021 ஆண்டிலிருந்து அனுமதிப்பத்திர கட்டணம் பில்லிடும் போது ஆண்டிற்கான சரியான வருமானத்தை பில்லிடுவதாக. | அட்டுறு அடிப்படையில் பில்லிடல் கணக்கீடு செய்ய வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஈ) | கடந்த ஆண்டிற்காக கிடைத்திருந்த ரூபா 141,720 ஆன நீதிமன்ற தண்டப்பண மிகை ஒதுக்கீட்டிற்காக சீராக்கம் செய்யாது ஆண்டின் வருமுானமாக கணக்கீடு செய்திருந்த காரணத்தால் செயற்பாட்டு வருமானம் சமமான பெறுமானத்தால் கூடுதலாக காட்டப்பட்டிருந்தது. | 2021 ஆண்டில் கணக்குகள் தயாரிக்கும் போது ஐர்னல் குறிப்பினூடாக சரி செய்வதாக. | ஆண்டிற்குரிய வருமானத்தை சரியாக இனங்கண்டு கணக்கீடு செய்ய வேண்டும். |

### 1.6.2 இணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்ககுகள் அல்லது அறிக்கைகள்

| விடயம் | சபையின் கருத்துரை | சிபார்சுகள் |
|---|---|---|
| கணக்கு விடயமொன்றிற்குரிய நிதி ஓக்கீட்டின் பிரகாரம் பெறுமதி ரூபா 57,905 மற்றும் அட்டவணை பிரகாரம் பெறுமதி ரூபா 188,689 ஆனதில் ரூபா 130,784 ஆன வித்தியாசம் நிலவியது. | பில்லிடல் தவறொன்று எதிர்காலத்தில் கணக்கு தயாரிக்கும் போது இத் தவறை சரி செய்வதாக. | கணக்கில் காட்டப்படும் மீதி வங்கி மீதி உறுதிப்பாட்டுடன் இணங்க வேண்டும் |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2020 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவை மிகைத்த வருமானம் ரூபா 11,323,055 தொகையாக இருந்ததுடன், அதற்கு நேரொத்ததாக முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவினத்தை மிகைத்த வருமானம் ரூபா 12,283,655 ஆனது.

### 2.2 வருமான நிருவாகம்

### 2.2.1 வருமானங்களை சேகரிக்கும் செயலாற்றல்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|---|
| (அ) | வீதவரி மற்றும் குத்தகை | | |
| (i) | மீளாய்வாண்டு இறுதியில் ரூபா 977,329 ஆன நிலுவை வீதவரி மீதியை அறவிட நடவடிக்கை எடுத்திருக்காததுடன், 2014 ஆண்டின் பின்னர் சொத்து மதிப்பீடு செய்திருக்கவில்லை. | ஆதனத்தடை செய்யும் வேலைத் திட்டத்தை மேற்கொண்டு மீதியை அறவிட நடவடிக்கை எடுப்பதாக. | சபைக்கு அறவிட வேண்டிய வருமானத்தை அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ii) | மீளாய்வாண்டு இறுதியில் ரூபா 61,325 ஆன நிலுவை ஏக்கர் வரி மீதியொன்றானது. | எதர்காலத்தில் மீதிப்பணத்தை அறிவிட நடவடிக்கை எடுப்பதாக. | சபைக்கு அறவிட வேண்டிய வருமானத்தை அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். |

(ஆ) ஏனைய வருமானம்

| | | |
|---|---|---|
| சபை அதிகார எல்லையில் அமைத்துள்ள விளம்பர பலகைகளை இனங்காண வருடாந்தம் கணிப்பீடொன்றை மேற்கொண்டு இருக்காததுடன், 2020 ஆண்டிற்காக 10 விளம்பர பலகைகளிற்காக அறவிட வேண்டிய ரூபா 55,600 தொகை அறவிடப்படவில்லை. | இவ் அறிவித்தல் பலகைகளுக்காக கட்டணம் செலுத்துமாறு கடிதம் மூலம் அறவித்துள்ளதாகவும், அறவித்தல் பலகை அகற்றியுள்ளதால் கட்டணம் அறவிட முடியாதுள்ளதாக. | சபைக்கு அறவிட வேண்டிய வருமானத்தை அறவிட வேண்டும். |

(இ) நீதிமன்ற தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்

| | | |
|---|---|---|
| மாகாண சபை பிரதான செயலாளரிடமிருந்து மற்றும் ஏனைய அதிகாரிகளிடமிருந்து 2020 திசெம்பர் 31 திகதியன்று அறவிட வேண்டியதான 2020 ஜுலை முதல் திசெம்பர் வரையான காலத்திற்குரிய முத்திரைக் கட்டணம் ரூபா 6,105,290 இனை 2020 ஆண்டிறுதியிலும் இனங்கண்டிருந்த போதும் அறவிட்டிருக்கவில்லை. | முத்திரைக் கட்டண அட்டவணை தயாரிக்கப்படுவது காணி மற்றும் மாவட்ட பதிவாளர் அலுவலகத்தினால் ஆகையால், அது தொடர்பாக கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாக. | ஆண்டிற்காக அறவிட வேண்டிய வருமானத்தை சரியாக இனங்கண்டு அறவிட வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

பிரதேச சபை அதிகாரச்சட்டத்தின் 3 ஆம் பிரிவின் கீழ் பொது சுகாதாரம், பொதுப் பாவனைச் சேவைகள், பொது வீதி தொடர்பான விடயங்களை முறைமைப்படுத்துதல் மற்றும் நிருவகித்தல், பொதுமக்களின் நல்வாழ்வு, வசதிகள், நலன்புரி என்பனவாக சபையினால் நிறைவேற்றப்பட வேண்டியிருந்த செயற்பாடுகளை நிறைவேற்றுவது தொடர்பாக அவதானிக்கப்பட்ட விடயங்கள் கீழே தரப்படுகின்றன.

### 3.1 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கலகள்

| **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | **சபையின் கருத்துரைகள்** | **சிபார்சுகள்** |
|---|---|---|
| பிரதேச சபை நிதியத்தை பயன்படுத்த முடியுமான செயற்பாடுகளிற்கு முறனான செயற்பாடுகளுக்கு 2020 மார்ச் 26 திகதிய சபை அறிக்கையின் அவசர ஆலோகனை 5.7(iii) பிரகாரம் "கொவிட் தொற்று நிலைமை காரணமாக தங்கள் பிரிவுகளின் துணையற்ற மக்களுக்கு நிவாரணம் வழங்க" எனக் குறிப்பிட்டு ஒரு மக்கள் பிரதிநிதிக்கு ரூபா 25,000 வீதம் 16 மக்கள் பிரதிநிதிகளுக்கு கூட்டுத் தொகை ரூபா 390,000 கடன் வழங்கப்பட்டிருந்தது. | தொற்று நிலைமை காரணமாக பிரிவுகளில் பொது மக்களிற்கு நிவாரணம் வழங்க மக்கள் பிரதிநிதிகளுக்கு வழங்கிய கடன் தொகையை நோக்கத்துடனான நடவடிக்கைகளுக்கு பயன்படுத்தியதாக மக்கள் பிரதிநிதிகளிடமிருந்து அறிக்கையொன்றை பெற்றுள்ளதாக. | பிரதேச சபை நிதியம் சட்டத்தில் குறிப்பிடும் ஏற்பாடுகளிற்கு முறனான விடயங்களிற்கு பயன்படுத்தக் கூடாது. |

## 3.2 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|---|
| (அ) | சபையினால் அனுமதியற்ற நிர்மாணங்களை இனங்காண ஒழுங்கான முறைமையொன்றை பின்பற்றியிருக்காததுடன், 2019 ஆண்டு இனங்கண்டிருந்த 03 அனுமதியற்ற நிரமாணங்களை முறையாக்க அல்லது அகற்ற சபை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. அவ்வாறே 2020 ஆண்டு இனங்கண்டிருந்த 05 அனுமதியற்ற நிர்மாணங்களில் 04 தொடர்பில் எவ்வித நடவடிக்கையும் எடுத்திருக்கவில்லை. | 2019 ஆண்டு இனங்கண்டுள்ள அனுமதியற்ற நிர்மாணங்களை முறையாக்க சபைக்கு முன்வைத்துள்ளதாகவும், 2020 ஆண்டின் அனுமதியற்ற நிரமாணங்கள் தொடர்பில் தொழிநுட்ப உத்தியோகத்தரை விசாரணைக்கு ஈடுபடுத்தியுள்ளதாகவும், எதிர் காலத்தில் அது தொடர்பாக செயற்பட நடவடிக்கை எடுப்பதாக. | அதிகார எல்லையில் காணப்படும் அனுமதியற்ற நிர்மாணங்களை இனங்கண்டு அதற்குரிய நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | 1973 ஜனவரி 15 திகதிய ஒழுங்கை வதிவு வீட்டு உத்தேச திட்டதிற்காக சபைக்கு ஒப்படைத்திருந்த காணியில் முதலாவது நிர்மாணித்திருந்த 05 வீடுகளிற்காக 05 தனி உருதிகள் விநியோகித்திருந்ததுடன், அக்காணியை அளவையிட்டு 32 பகுதிகளிற்கு பிரிக்கப்பட்டிருந்தன. நிவித்திகல் பிரதேச செயலாளரின் 2015 ஆகஸ்ட் 16 திகதிய கடிதம் மூலம் இக் காணி சபைக்கு சொந்தமான காணியொன்றாகையால் பயன்பாட்டாளர்களுக்கு அனுமதிப்பத்திரம் வழங்குதல் மற்றும் பிரச்சினைகளை தீர்க்கும் நடவடிக்கை பிரதேச சபைக்கு ஒப்படைக்கப்பட்டிருந்த போதும், நீண்ட காலமாக நிலவும் மேற்குறிப்பிட்ட பிரச்சினைகளை 2020 நவம்பர் அளவிலும் தீர்த்துக் கொள்ள சபைக்கு இயலாதிருந்தது. | உள்ளூராட்சி உதவி ஆணையாளரிற்கு அறிவித்ததன் பின்னர் பிரதான செயலாளிரிற்கு சட்ட ஆலோசனை வழங்குமாறு அறிவித்துள்ளதாகவும், அதன் பிரகாரம் வழங்கப்படும் ஆலோசனை மற்றும் அங்கீகாரத்திற்கு உரியதாக வீடுகளில் வசிப்பவர்களின் பிரச்சினைகளை தீர்க்க நடவடிக்கை எடுப்பதாக. | வதிவாளர்களுக்கு உரிய உருதிகளை வழங்கி பிரச்சினையை தீர்க்க விரைவில் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 3.3 ஓப்பந்த நிர்வாகக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|---|
| (அ) | பிரதேச சபை பொதுச் சந்தை கட்டிடத் தொகுதியின் மேல் மாடி நிர்மாண வேலைகளை 03 கட்டங்களில் கீழ் நிர்மாணங்களை பூர்த்தி செய்ய எதிர்பார்த்து வெவ்வேறாக மதிப்பிடப்பட்ட கருத்திட்டத்தின் மதிப்பீட்டுப் தொகை ரூபா 4,877,238 ஆனது. மேலே 03 கட்டங்களிற்குரிய மதிப்பீடு 2019 திசெம்பர் மாதம் அங்கீகரிக்கப்பட்டு மட்டுப்படுத்தப்பட்ட டெண்டர் கோரப்பட்டிருந்ததுடன், அங்கு ஒரு ஒப்பந்ததாரர் மாத்திரம் முன்வந்திருந்தார். மீண்டும் விலை மனு கோராது மூன்று கட்டங்களையும் ஒரே நிறுவனத்திற்கு வழங்க 2020 பெப்ரவரி 11 திகதி டென்டர் சபை தீர்மானித்திருந்தது. மேலே முழு வேலைகளுக்குமாக நிதிப் பிரமாணம் 20 பிரகாரம் மொத்தக் கிரய மதிப்பீடொன்றை தயாரிக்க சந்தர்பபம் இருந்த போதும் மொத்த வேலைகளையும் 03 கட்டங்களிற்காக வெவ்வேறாக மதிப்பீடு தயாரித்தன் காரணமாக திறந்த டென்டர் கோரலின் மூலம் போட்டி அடிப்படையிலான விலைகள் சமர்பிக்கப்படும் சந்தர்ப்பம் இழக்கப்பட்டிருந்தது. அதன் காரணமாக பெறுகையின் அடிப்படை நோக்கமான போட்டியொன்றை ஏற்படுத்துவதன் மூலம் நிறுவனத்திற்கு பெற முடியுமாக இருந்த நலன்கள் இழக்கப்பட்டிருந்தன. | பொதுச் சந்தை கட்டிடத் தொகுதி நிர்மாணித்தல் முக்கிய நடவடிக்கை ஒன்ராகையால் இந் நிர்மாண வேலைகளை மேற்கொள்ள சபைக்கு சொந்தமாக போதிய பணம் இல்லாததாலும் வேறு நிதி பாய்ச்சலின் கீழ் ஒதுக்கீட்டை ஏற்பாடு செய்துகொள்ளும் நோக்கில் இவ்வாறு மதிப்பீட்டை பல கட்டங்களின் கீழ் தயாரித்ததாக. | அபிவிருத்தி கருத்திட்டங்களிற்காக மொத்த கிரய மதிப்பீட்டை தயாரித்து பெறுகைகள் நடைமுறை மூலம் போட்டித் தன்மையை மேன்படுத்த வேண்டும். |